கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**அசல் வழக்கு எண்.178/2015**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 10.12.2024 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC), திருமதி.S.Suganiya Sri, B.A.B.L.,(Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 10.12.2024 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | சவுரிராஜன் | வயது.. | 65 |
| தந்தை பெயர்.. | முருகேசன் | கிராமம்.. | ஓடாக்கநல்லூர் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதிகள்தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி..**

**13.** என் தகப்பனாருக்கு வழக்கு சொத்து எப்படி கிடைத்தது என்றால் பாக அட்டவணை மூலம். அது எந்த வருடம் ஏற்பட்டது என்றால் 15.05.1949. பாகஅட்டவணை பதிவு செய்தார்களா என்றால் பதிவு செய்யவில்லை. என் தகப்பனாருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் நான் ஒரே மகன், ஒரு மகள். எனது தகப்பனார் உயில் அல்லது செட்டில்மெண்ட் எழுதி வைத்தாரா என்றால் இல்லை. என் தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் 1981. எனது தகப்பனாரின் வாரிசு சான்றிதழ் உள்ளதா என்றால் உள்ளது. 1949-1981 வரை எனது தகப்பனார் வழக்கு சொத்தை அனுபவித்து வந்தார் என்பதை குறிப்பதற்கு ஏதேனும் வருவாய் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை.

14. 1949-1981 வரை பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. என் பெயரில் எந்த வருடம் பட்டா மாறியது என்றால் 17.03.1990. பட்டா மாறுதல் தொடர்பாக தாசில்தார் போட்ட உத்தரவு ஏதேனும் உள்ளதா என்றால் உள்ளது, நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 17.03.1990 ல் பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பிததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் அந்த பட்டா மாறுதல் உத்தரவின் பெயரில் தான் சிட்டா, அடங்கல் என் பெயரில் மாறியது என்றால் சரிதான் அந்த ஆவணம் தான் பி.வா.சா.ஆ.8,9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

15. பி.வா.சா.ஆ.8,9 பிரகாரம் எனக்கு எவ்வளவு விஸ்திரணம் பட்டா வழங்கப்பட்டது என்றால் 0.04 செண்ட் . அதன் பட்டா எண். என்னவென்றால் புல எண்.59/23A. புல எண்.59/23 ல் எத்தனை உட்பிரிவு உள்ளது என்றால் 5 உட்பிரிவு. எனக்கு கொடுத்த 0.4 செண்ட் போக மற்ற 0.12 செண்ட் பட்டா யாருக்கு கொடுக்கப்பட்டது என்றால் கிட்டு. மனோகரன், இளங்கோவன், தனசேகரன். அந்த 0.12 செண்டிற்கு உட்பிரிவு என்னவென்றால் எனக்கு தெரியாது. புல எண்.59/23A வின் பட்டா எண். என்னவென்றால் பட்டா எண். 95. புல எண்.59/9B யில் 0.02 1/2 செண்ட் நிலம் எனக்கு உள்ளது. அதன் பட்டா எண். என்னவென்றால் ஞாபகம் இல்லை. புல எண்.59/23A காலி மனையாக உள்ளதா என்றால் காலிமனையாகும்.

16. புல எண்.59/23 யில் கிட்டுவிற்கு வீடு உள்ளதா என்றால் காலி மனையாக தான் உள்ளது. புல எண்.59/23 யில் இளங்கேசன் வீடு உள்ளதா என்றால் சிமெண்ட் ஓடு போட்ட வீடு உள்ளது. இளங்கேசன் எத்தனை வருடமாக அந்த வீட்டில் குடியிருக்கிறார் என்றால் ஏற்கனவே கல் வீடு இருந்தது பின்பு பாகஅட்டவணை போட்ட பிறகு அதை இடித்து விட்டு சிமெண்ட் ஓடு போட்ட வீடு இளங்கேசன் கட்டினார். இளங்கேசன் சிமெண்ட் ஓடு போட்ட வீட்டில் எத்தனை வருடம் குடியிருக்கிறார் என்றால் 2010 யில் இருந்து வசித்து வருகிறார் . 0.04 செண்ட் இருப்பதாக கூறியுள்ள நிலையில் பி.வா.சா.ஆ.8,9 பிரகாரம் புல எண்.59/23A, 0.02 3/4 செண்டிற்கு பட்டா கொடுத்தார்கள் என்றால் எனக்கு படிக்க தெரியாது அவர்கள் கொடுத்தார்கள் வாங்கியுள்ளேன், எனது அனுபவத்தில் 0.04 செண்ட் நிலம் உள்ளது.

17. நான் செலுத்திய தீர்வை ரசீதுகள் பட்டா எண்.95 யிற்கு தான் கட்டியுள்ளேன் என்றால் சரிதான். அசல் வழக்கு.163/2010 என்ற வழக்கு இதே நீதிமன்றத்தில் நடந்ததா என்றால் சரிதான். அந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது எனது மனைவிக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தேனா என்றால் வழக்கு போடுவதற்கு முன்பே செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தேன். அந்த செட்டில்மெண்ட் எப்போது எழுதப்பட்டதா என்றால் 23.04.2010. அந்த செட்டில்மெண்ட்யில் வழக்கு சொத்து காலிமனை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். செட்டில்மெண்ட்யில் செந்தில், பரசுராமன் ஆகியோர் சாட்சிகளாக கையெழுத்திட்டுள்ளனர், செந்தில், பரசுராமன் எனக்கு உறவினரா என்றால் இல்லை., செந்தில் என்பவர் எனது ஊர்காரர் என்றால் சரிதான், அவரது தகப்பனார் ஆறுமுகம் எனது பக்கத்து வீட்டுக்காரர்.

18. 0.04 செண்டிற்கு தென்புரம் யார் வசிக்கிறார்கள் என்றால் கிட்டு, மனோகரன், இளங்கோவன், தனசேகரன் ஆகியோர்கள். செட்டில்மெண்ட் பத்திரம் யார் எழுதினார்கள் என்றால் பழனிசாமி. அந்த செட்டில்மெண்ட்டிற்கு முத்திரை தாள் எங்கு வாங்கப்பட்டது என்றால் சேத்தியாத்தோப்பு எவ்வளவிற்கு முத்திரைதாள் வாங்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. பதிவாளர் அலுவலகத்தில் எவ்வளவு பதிவு கட்டணம் செலுத்தினேன் என்றால் ஞாபகம் இல்லை. அந்த செட்டில்மெண்ட் அனுசரித்து எனது மனைவி வைரமணி பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. செட்டிமெண்டை அனுசரித்து எனது மனைவி பெயரில் பட்டா மாறுதல் செய்ய மனு ஏதேனும் கொடுத்தேனா என்றால் மனு கொடுத்தேன். அந்த மனு எப்போது கொடுத்தேன் என்றால் ஞாபகம் இல்லை. அந்த மனு அனுப்பியதற்கு ஏதேனும் ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது.

19. அது என்ன ஆவணம் என்றால் முத்திரை தாள் ஒட்டி வட்டாச்சியரிடம் எழுதிக்கொடுத்த மனு தான். வட்டாச்சியரிடம் மனு கொடுத்தது வாதிகளுக்கு தெரியுமா என்றால் தெரியும். வட்டாச்சியர் வழக்கு நிலுவையில் இருப்பதால் பட்டா மாறுதல் கொடுக்கமுடியாது என்று உத்தரவு பிறப்பித்தார் என்றால் வழக்கு நிலுவையில் இருப்பதால் பட்டா மாற்ற முடியாது என்று மனுவை நிராகரித்துவிட்டார். அவ்வாறு மனு நிராகரித்த பிறகு கோட்டாட்சியருக்கு மேல்முறையீடு செய்தேனா என்றால் இல்லை.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

*Sd/-S.Suganiya Sri,*
Additional District Munsif(FAC),
Chidambaram.